www.padippakam.com



# இபின் பட்டுட்டாவின் பார்வையில் ஆரியச் சக்கரவர்த்தி

19

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த வரோதய சிங்கையாரியன் தனக்கெதிராக கலகம் செய்த வன்னியர்களை அடக்கி தனது ஆட்சியை வலிமையுறச் செய்தான்.


கி.பி. 1322-ல் குடாநாட்டுத் துறைமுகத்துக்கு வந்த மேற்குநாட்டு கத்தோலிக்க குருவான பிரையர் ஓடெரிக் (Friar Odoric) என்பவர் வரோதய சிங்கையாரியனுடைய ஆட்சியின் சிறப்புப் பற்றி எழுதியுள்ளார். இவ் அரசனுக்கு ஏராளமான பொன்னும் வெள்ளியும், உலகில் வேறெங்குமே இல்லாத நல்ல முத்துக்களும் உண்டென்றும் அவனது கழுத்திலே 300 பெரு முத்துக்களால் ஆக்கப்பட்ட மாலை ஒன்று இருந்ததென்றும், கையில் ஒரு சாண் அகலமுள்ள இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட தங்கக் காப்பொன்றை இவன் அணிந்திருந்தானென்றும் அவர் தனது பிரயாணக்குறிப்பிலே எழுதியுள்ளார்.

**வேறு எந்த நாடுகளிலாவது நீர் முத்துக்குளிப்பை கண்டிருக்கிறீரா என்று அரசர் என்னைக் கேட்டார். நான் ஆம் குயஸ் தீவுகளில் அவற்றைக் கண்டேன் என்று சொல்ல. நீர் அந்தத் தீவுகளில் பார்த்த முத்துக்கள் இம்மாதிரியானதா? என்று சில முத்துக்களை கையில் எடுத்தவாறு மன்னர் என்னைக் கேட்டார். நான் பார்த்த முத்துக்கள் இவற்றை விட தரத்தில் குறைந்தவை என்று நான் மன்னருக்குப் பதில் சொல்ல இம் முத்துக்கள் உமக்கே உரித்தாகட்டும் நீர் வெட்கப்பட வேண்டாம். உமக்குத் தேவையானவற்றை என்னிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.**

தனது முன்னோர்களைவிட தமிழ் மொழியை வளர்ப்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்ட வரோதய சிங்கை ஆரியன் தனது நாட்டிலும், தமிழ் நாட்டிலுமிருந்து புலவர்களையும் தமிழ் பண்டிதர்களையும் ஒன்றுதிரட்டி தனது அரச சபையிலே தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவியதாக அறியப்படுகிறது.

கி.பி. 1325-ல் வரோதய சிங்கை ஆரியன் இறக்க இவன் மகன் மார்த்தாண்ட சிங்கை ஆரியன் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் கி.பி 1344ல் இஸ்லாமிய யாத்திரிகரான இபின் பட்டுட்டா (Ibn Batuta) என்பவன் குடாநாட்டுக்கு வந்து மார்த்தாண்ட சிங்கை ஆரியனுடைய விருந்தாளியாகத் தங்கியிருந்தான். சிங்கை நகர் அரசர்களைப் பற்றியும் அவர்களது படைபலம் ஆட்சிமுறை பற்றிய அதிகளவு தகவல்கள் இவனது பயணக் குறிப்பில்தான் காணப்படுகிறது.

கி.பி. 12.09.1345 திகதியன்று மாலைதீவிலிருந்து புறப்பட்ட இபின் பட்டூட்டா 9 நாட்கள் கடற் பயணம் செய்த பின் 21.09.1345 அன்று ஆரியச் சக்கரவர்த்தியின் நாட்டு (குடாநாடு) துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தான். அவர் வந்துசேர்ந்த இடத்தின் பெயர் (துறைமுகத்தின் பெயர்) "புத்தல" என்று குறிப்பிட்டுள்ளான். அந்த நகரம் அழகான சிறுநகரமென்றும், மரத்திலான மதில்களும், கோபுரங்களுடன் கூடிய கட்டடங்களால் அது அழகு பெற்றிருந்ததென்றும் அந் நகரின் கடற்கரையோரங்களில் கறுவா மலை போல் குவித்து வைக்கப்பட்டிருந்ததென்றும் அதைப் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு நாட்டு வணிகர்கள் அங்கே வந்திருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்ததோடு தான் வந்த காலகட்டத்தில் ஆரியச் சக்ரவர்த்தியின் பெரிதும், சிறிதுமான நூறு கப்பல்கள் அங்கு வந்து சென்றதை தான் கண்டதாகவும், ஆரியச் சர்க்கரவர்த்தியின் எட்டுக் கப்பல்கள் பொருட்களை ஏற்றிக்கொண்டு யேமன் (அரபு நாடு) நாட்டுக்குச் செல்ல தயாராக நங்கூரமிட்டுக் கொண்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.



மேலும் நான் சுல்தான் ஆரியச் சக்கரவர்த்தியின் சமூகத்திற்கு (அரசசபைக்கு) சென்றபோது அவர் எழுந்து என்னை வரவேற்று தன்னருகில் இருக்கச் செய்து இன்மொழி பகன்றார். எனக்கு தங்குமிட வசதிகள் செய்துகொடுக்குமாறு பணித்தார். அங்கே தினம் தினம் பெருகிவரும் உபசரிப்புடன் மூன்றுநாள் தங்கியிருந்தேன். அந்த மன்னருக்கு நான் பேசிய பாரசீக மொழி தெரிந்திருந்தது. என்று தனது பயணநூலில் கூறும் இபின் பட்டூடா இன்னோரிடத்தில், "ஒருநாள் நான் மன்னரிடம் சென்றபோது அவர் இராச்சியத்திலுள்ள முத்துக்குளிப்பிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட ஏராளமான முத்துக்கள் அவர் முன்னே குவித்து வைக்கப்பட்டிருந்தன. அரசரின் வேலையாட்கள் அவற்றிலிருந்து சிறந்த முத்துக்களை தெரிந்தெடுப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்."

வரும்போது வேறு எந்த நாடுகளிலாவது நீர் முத்துக்குளிப்பை கண்டிருக்கிறீரா என்று அரசர் என்னைக் கேட்டார். நான் ஆம் குயஸ் தீவுகளில் அவற்றைக் கண்டேன் என்று சொல்ல. நீர் அந்தத் தீவுகளில் பார்த்த முத்துக்கள் இம்மாதிரியானதா? என்று சில முத்துக்களை கையில் எடுத்தவாறு மன்னர் என்னைக் கேட்டார். நான் பார்த்த முத்துக்கள் இவற்றை விட தரத்தில் குறைந்தவை என்று நான் மன்னருக்குப் பதில் சொல்ல இம் முத்துக்கள் உமக்கே உரித்தாகட்டும் நீர் வெட்கப்பட வேண்டாம். உமக்குத் தேவையானவற்றை என்னிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். என்று சொல்லி மன்னன் அம் முத்துக்களை தனக்கு பரிசளித்ததாக கூறியுள்ளார்.

இபின் பட்டூட்டா ஆரியச் சக்கரவர்த்தியிடம் தான் சிவனொளிபாத மலையைத் தரிசிக்க விரும்புவதாகக் கூற அவன் நான்கு யோகிகள், நான்கு பிராமணர்கள், சிவிகையாளர்கள் முதலான பரிவாரங்களுடன் அவனுடைய யாத்திரிகைக்கு வேண்டிய பொன்னும் பொருளும் கொடுத்தாகவும் அவற்றைப் பெற்றுக் கொண்டு முதல் நாள் மூங்கிலால் செய்த ஓடத்தில் ஆற்றைக் கடந்து, மன்னார்- சிலாபம் வழியாக கோனார் என்னும் தென்னிலங்கை மன்னனின் கோ நகரையடைந்து அங்கிருந்து இரத்தினபுரி வழியாக சிவனொளிபாத மலைக்குச் சென்று தரிசனம் நடத்திவிட்டு பின்னர் மறுவழியாக இறங்கி தெய்வேந்திர முனைக்கு (தெவிநுவரை) சென்றபோது அங்கே மிகப்பெரிய இந்த ஆலயம் ஒன்றில் ஒரு ஆள் உயரத்திலான தங்க விக்கிரகமும் ஆயிரம் அந்தணர்களும், யோகிகளும், 500 தேவதாசிகளும் இருந்ததாக தனது நூலிலே எழுதியுள்ளான்.

இந்து இபின் பட்டூட்டாவின் பிரயாண வரலாற்றுக் குறிப்பு யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியின் வலிமையையும், கடற்படை பலத்தையும், சிறப்பையும் அதிகளவுக்கு எடுத்துக்கூறும் வெளிநாட்டவர் ஒருவரின் நூல் என்பதில் தமிழ்வரலாற்று அறிஞர்கள் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இவர் வந்து இறங்கியதாகச் சொல்லப்படும் "புத்தல" என்ற இடம் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் உண்டு. பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இபின் பட்டூட்டா குறிப்பிடும் "புத்தள" என்பது புத்தளத்தையே குறிக்கும் என்றும் அவர் கடந்ததாகச் சொல்லப்படும் ஆறு "வந்துள ஓயா" என்றும், அவர் குறிப்பிட்ட கோனார் என்னும் தென்னிலங்கை மன்னன் அளசுக்கோனார் என்றும் அவனது நாடான கோநாடு என்பது கோட்டை என்றும் கூறுகின்றனர்.

ஆனால், முதலியார் இராஜநாயகம், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை முதலானோர் இபின் பட்டூட்டா குறிப்பிடும் புத்தல, புத்தளம் கிடையாது அது குடாநாட்டிலுள்ள இடமே என்று வாதிடுகின்றனர். குடாநாட்டிலுள்ள கோவளம் துறைமுகத்தையே அவர் ஏதோ காரணம் பற்றி புத்தள என்று குறிப்பிட்டுள்ளார். அவர் கடந்த ஆறு பூநகரிக் கடல் என்றும் அதைக் கடக்கப் பயன்பட்ட மூங்கில் ஓடம் அக் காலத்தில் வழக்கிலிருந்த 'சங்கடம்' என்னும் ஓடம் என்றும் முதலியார் இராஜநாயகம் கூறுகிறார்.

இபின்பட்டுடா வந்திறங்கிய இடம் சிங்கை நகருக்கு அண்மையில் கப்பல்துறை என்று அழைக்கப்பட்ட இன்றைய கற்கோவளம் பகுதியே என்றும், கற்கோவளத்திற்கு அண்மையிலுள்ள "புட்டளை" என்னும் ஊரையே இபின் பட்டூட்டா "புத்தல" என்று குறிப்பிட்டார் என்றும் இப் புட்டளை சிங்கை நகரின் ஒரு பகுதியாக இருந்தது என்பது பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் வாதமாகும்.

இபின் பட்டூட்டாவினால் புகழ்ந்து சொல்லப்படும் மார்த்தாண்ட சிங்கையாரியன் கி.பி 1347-ல் இறக்க அவன் மகன் குணபூசனை சிங்கை ஆரியன் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் முடிசூட்டப்பட்டான் ஆனாலும் அவனுக்கு அரசைக் கொண்டுநடத்துவதற்கு ஏற்ற வயது வராதபடியினால் அவனது தாய் அவனுக்காய் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தி வந்தாள்.

கி.பி 1348-ல் ரோமாபுரியிலிருந்து சீனாவுக்குச் செல்லும் மார்க்கத்தில் ஜோன் து மரிஞ்ஜெல்லி (John de Marignolli) என்னும் கிறிஸ்தவ தூதுவன் கோவளத் துறையில் இறங்கி குடாநாட்டு அரசியை சந்தித்ததாக தனது பிரயாணக் குறிப்பிலே கூறியுள்ளான்.

கோவளத்தில் இறங்கிய தான் கீரிமலை என்ற புனித ஸ்தலத்திற்குச் சென்று அம் மலையினடிவாரத்தில் நிலத்திலிருந்து ஊற்றெடுத்து கடலில் பாயும் திவ்விய அருவிநீரைப் பருகியதாகவும் அதன்பின் "மாயா" என்ற குடாநாட்டு அரசியை தான் சென்று தரிசித்ததாகவும் அந்தச் சீமாட்டி பெருவிருந்தொன்றை ஏற்பாடு செய்து தன்னுடனிருந்து உணவுண்டதாகவும், தனக்கு 11 மாதமாக இருந்த வயிற்றுளைவுநோயை அந்த அரசியின் வைத்தியப்பெண் சுலபமான மருந்தால் குணப்படுத்தியதாகவும் தனக்கு வேண்டியளவுக்கு தங்கமும் ஆடைகளும் பொருட்களும் வெகுமதியாக அந்த அரசி கொடுத்ததாகவும் பின்பு அவற்றை பேருவளை என்னுமிடத்தில் கோயாஜுவான் என்னும் கடற்கொள்ளைக்காரன் பறித்துவிட்டதாகவும் அவன் குறிப்பிட்டுள்ளான்.

கி.பி 1375-ல் வரையப்பட்ட கற்றலன் மப் (Catalan Map) என்னும் இலங்கை வரைபடத்தில் வடபகுதியில் பெண்ணரசு நடந்ததாக குறிப்பிட்ட குறிப்பும் மரிஞ்ஜெல்லியின் சேதியும் கால ஒற்றுமை கொண்டவையாக இருக்கின்றன.

**- நக்கீரன்**

படிப்பகம்